செ.வெ.எண்-14 நாள்-06.03.2021

# அரியலூர் மாவட்டம்

# 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து பிரச்சார வாகனத்தினை அரியலூர் நகராட்சி ஆணையர் (பொ) திரு.மனோகரன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் வரும் **சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதன்படி அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், அரியலூர் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து நகராட்சியின் சார்பில் பிரச்சார வாகனத்தினை அரியலூர் நகராட்சி ஆணையர் (பொ) திரு.மனோகரன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பிரச்சார வாகனமானது அரியலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளுக்கும் சென்று வாக்களிப்பதன் அவசியம் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட பிரச்சார விழிப்வுணர்வை மேற்கொள்ள உள்ளனர்.

மேலும், வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை நகராட்சிக்குட்பட்ட வணிக வளாகங்கள், பேருந்துநிலையங்கள், வழிபாட்டு தலங்கள், உணவகங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஒட்டப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஒட்டுவில்லைகள் அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான தூய்மை வாகனங்கள், அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களிலும் நகராட்சி பணியாளர்கள் மூலமாக ஒட்டப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.சரவணன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) அ.பாரதி, துப்புரவு ஆய்வாளர் முத்துமுகமது உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**